# கலைஞரும் நானும்

89

**மொழி என்பது நம்பிக்கை, சமூகம் என்பது பாதுகாப்பு. அதன் அடையாளமாகத் திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார் மூத்த பத்திரிகையாளர் பீர் முகமது.**

படம் : யோகா



# "மொழியால் ஈர்த்த முன்னவர்!"

**பீர் முகமது,** பத்திரிகையாளர்



எனது பள்ளிப் பருவத்தில், வாசிப்புத் தொடங்கிய காலத்தில் இருந்தே கலைஞரை அறிவேன். எங்கள் ஊரான கல்குறிச்சியில் தினமும் தவறாமல் 'முரசொலி' வாசிக்கும் கிறிஷ்டோபர் என்கிற அண்ணனிடமிருந்து, நானும் 'முரசொலி' வாசிக்கப் பழகினேன். அவர் தீவிரமான கழகத் தொண்டர். காலையிலேயே முரசொலியை வாசித்துவிட்டு, கலைஞரின் உரை, கலைஞரின் கடிதங்கள் ஆகியவற்றை அவர் உச்சரிக்கும் விதம், என்னை ஈர்த்தது. அதைப் பார்த்து ஊக்கமடைந்து நானும், கலைஞரை வாசிக்கத் தொடங்கினேன் என்று சொல்லலாம். கலைஞரின் மொழிக்கும் எனக்குமான முதல் உறவு அப்படி அமைந்தது.

பிறகு, ஊடகத் துறைக்கு வந்த பிறகு 'முரசொலி' வாசிப்பது வழக்கமானது. தவிர, பல சந்தர்ப்பங்களில் கலைஞரைச் சந்திக்கும் வாய்ப்புகள் அமைந்துள்ளன. அவர் என்னைக் குறித்து அறிந்து கொள்ளும் வகையிலான சந்திப்பு அமைந்தது, 2007-ஆம் ஆண்டில்தான். அப்போது நான் 'இந்தியா டுடே' பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்கள், அந்த ஆண்டு முதல்முறையாக மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட உள்ளார் என்கிற செய்தியை வெளியிட்டு, விரிவான கட்டுரை எழுதியிருந்தேன். அதில் தனியாக ஒரு குறிப்பும் வெளியிட்டேன். அந்தக் குறிப்பு மிகச் சிறியதுதான். 'கலைஞரின் கலை இலக்கியத் தொடர்ச்சியாக வந்தவர்' என்கிற வகையில், தகவல் பகிர்ந்திருந்தேன். அந்தக் கட்டுரையை வாசித்துவிட்டு, கலைஞர் அழைத்திருந்தார். குறிப்பாக, அந்தக் குறுந்தகவலை ரசித்துப் பேசினார். அதற்கு முன்பும் எனது கட்டுரைகளை வாசித்ததால், ஆசிரியர் வாஸந்தி அவர்களைத் தொடர்பு கொண்டு பாராட்டி இருக்கிறார். இந்தமுறை என்னை அழைத்து முதல்முறையாக பாராட்டியது எனக்கு ஊக்கம் அளித்தது.

அவர் எழுத்துகளைப் படித்து வளர்ந்த என்னை, என் எழுத்துகளே அவரிடம் கொண்டு சேர்த்தன என்பதில் எனக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. மொழியைச் சிறப்பாகக் கையாள்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைக் கண்டுபிடித்து விடுவார். அவர்களைப் பாராட்ட அவர் தயங்கியதே இல்லை என்பதை அந்தக் கட்டுரை மூலம் உணர்ந்தேன்.

## கூர்மையான கவனிப்பு

2009-ஆம் ஆண்டில், 'டெக்கான் கிரானிக்கல்' ஆங்கிலப் பத்திரிகையில் தலைமைச் செய்தியாளராக இருந்தேன். அப்போது, 'திராவிட அரசியலும் இஸ்லாமும்' என்கிற தலைப்பில் சிறப்புக் கட்டுரை எழுதி இருந்தேன். அதிகாலையிலேயே அதை வாசித்துவிட்டு, சிறப்பு ஆசிரியராக இருந்த பத்திரிகையாளர் பகவான் சிங்கிற்கு தொலைபேசி செய்து, 'தம்பி கூர்மையாக எழுதி இருக்கிறார்' எனப் பாராட்டியதுடன், என்னையும் அதிகாலையிலேயே அழைத்துப் பாரட்டினார்.

தமிழ், ஆங்கிலம் என இரண்டு மொழி களிலும் எனது எழுத்துக்காக அவரிடம் பாராட்டுகளைப் பெற்றேன். 'ஒரு கையில் குடி அரசும், மறு கையில் 'தாருல் இஸ்லாம்' இதழும் ஏந்திச் சென்ற நினைவுகளை அவர் எழுதி இருப்பார். அதை நினைவூட்டிப் பாராட்டியதாக பகவான் சிங் கூறினார்.

'இந்தியா டுடே' இதழில் ஆனந்தன் நடராஜன் அவர்களுடன் சேர்ந்து கலைஞரை நேர்காணல் செய்யும் வாய்ப்பு அமைந்தது. கேள்விகளை அளித்தால், அவரே பதில் தயாரித்து அளித்து விடுவார். பதிலை நேரில் அளிக்கும் முன், ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்து விடுவார். அப்படி சென்றிருந்தபோது, அவருடன் விரிவாக உரையாடும் வாய்ப்பு அமைந்தது.

அப்போது எனது குடும்பப் பின்னணி குறித்து விசாரித்தவர், பத்மநாபபுரம் மன்ற உறுப்பினராக இருந்த, எனது பெரியப்பா குறித்து, விசாரித்து ஆச்சர்யமூட்டினார். எனது உறவினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.எல்.ஏ.வாக இருந்த நூர் முகமது அவர்கள் குறித்து விசாரித்து, நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார். தமிழ்நாட்டின் கடைக்கோடித் தொகுதி குறித்தும், அங்குள்ள களச் சூழல், அரசியல் போக்குகள் குறித்தும், அவர் அறிந்து வைத்திருந்தது பத்திரிகையாளராக எனக்கு வியப்பை ஏற்படுத்தியது.

## இடஒதுக்கீடு கோரிக்கைகள்

கலைஞர் முதலமைச்சராக இருந்த 2006-ஆம் ஆண்டு காலகட்டத்தில்தான் முஸ்லிம்களுக்கான 3.5 சதவிகித இட ஒதுக்கீடுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அது தொடர்பான பேச்சுகள் தொடங்கியபோது, அதை அமல்படுத்துவது தொடர்பாக, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் சில சந்தேகங்களை எழுப்பி இருந்தார். அப்போது முஸ்லிம் அறிஞர்களும், அமைப்புகளும் தங்கள் கருத்துகளைத் தொகுத்து முதல்வரிடம் அளிக்க விரும்பினர். அந்த ஆவணங்களை கலைஞரிடம் அளிக்கும் பொறுப்பினை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன். ஆவணங்களைப் பார்த்தவர், 'நல்ல பணி' என என்னைப் பாராட்டியதுடன், அது தொடர்பாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் ஆலோசனைக்குப் பின் செய்ய வேண்டியது என்ன எனப் பார்க்கலாம் எனக் கூறினார். அதுபோலவே, முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அறிவித்து, அதைக் கண்காணிக்க குழுவும் அமைத்து உத்தரவிட்டார்.

**மொழியின் மீதும், பண்பாட்டின் மீதும் அவர் கொண்டிருந்த காதல்தான் மொத்த தமிழ்நாட்டுடனும் அவரை இணைத்தது.**

## ஒபாமா வருகை எதிர்பார்ப்பு

2009-ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ஒபாமா இந்தியா வந்தபோது, டெல்லியில் மட்டும்தான் அவருக்கு நிகழ்ச்சி நிரல் இருந்தது. சென்னை, அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஒபாமாவை சென்னைக்கு அழைக்க விரும்பினர். அதற்காக, அப்போதைய ஒன்றிய அரசின் உதவியை எதிர்பார்த்த போது, அதை கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் பாலமாக இருந்தேன். "அப்படி ஒரு முயற்சி இருந்தால், அதை முழுமையாகச் செயல்படுத்துவோம்" என கலைஞர் இசைவு தெரிவித்தார். ஆனால், மிகக் குறுகிய காலத்தில் நடைபெற்ற முயற்சி என்பதால், அது நிறைவேறவில்லை. தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கும் எந்த முயற்சியாக இருந்தாலும், அதற்கு அவர் தடையாக இருந்ததில்லை. அவற்றுக்கு ஊக்கமூட்டு பவராகவே இருந்தார்.

2003-ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சர் அவர்கள், தி.மு.கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராக அறிவிக்கப்பட்டபோது, அவரது முதல் நேர்காணல் 'இந்தியா டுடே' இதழுக்காகச் செய்தேன். அந்த நேர்காணலை வாசித்துவிட்டு, சிறப்பாக வந்துள்ளது எனக் கருத்து சொன்னதுடன், முரசொலி நாளிதழில் அந்த நேர்காணலைக் குறிப்பிட்டு எழுதவும் செய்தார்.

எனது சகோதரியும் ஊடகத்துறையில்தான் இருக்கிறார். அவர், கலைஞரைச் சந்தித்த பொழுதும் ஊர், குடும்பம் குறித்து விசாரித்து, வாழ்த்தியதுடன், எனது மொழிநடை குறித்தும் பாராட்டியிருக்கிறார். இப்படியான தனிப்பட்ட அக்கறையும் கலைஞர் கொண்டிருந்தார்.

குறிப்பாக, எனது எழுத்துகளைப் படித்து, பாராட்டியது எனக்கு எப்போதும் மகிழ்ச்சி அளித்ததாக இருந்தது. தமிழில் ஆங்கிலத்தில் என இரண்டு மொழிகளில் எழுதிய கட்டுரைகளையும் அவர் பாராட்டி இருக்கிறார். அவரை, அரசியல் மட்டும் இயக்கவில்லை, எழுத்தும் இயக்கியது. ஊடகத்தின் முன்னவராக அவர் இருந்தார். மொழியின் மீதும், பண்பாட்டின் மீதும் அவர் கொண்டிருந்த காதல்தான் மொத்தத் தமிழ்நாட்டுடனும் அவரை இணைத்தது. அப்படித்தான், தமிழ்நாட்டில் கடைக்கோடி ஊரில் இருந்த என்னையும் மொழியால், ஆளுமையால் ஈர்த்தவர் கலைஞர்.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## பரவட்டும், அறிவியக்க அடையாளம்!




தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் தி.மு.கழகத்தின் படிப்பகங்கள், கழகத்தினரின் முடித் திருத்தகம் ஆகிய இடங்கள் தவிர்க்க முடியாதவை. அறிவியக்க மையங்களாக அவை திகழ்ந்தன. அவை தான், அரசியல் மாற்றங்களுக்கு விதையாக இருந்தன என்றால், மிகையில்லை. சமூகநீதி, சமத்துவம் வளர உலக அறிவு பெற வேண்டும் என வலியுறுத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள், வீட்டுக்கு வீடு நூலகம் அமைக்கப்பட்ட மாநிலமாக தமிழ்நாடு இருக்க வேண்டும் என கனவு கண்டார். இன்று 'பொதுநூலக இயக்கம்' வளர்ந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளதுடன், வீட்டு நூலகங்களுக்கு விருதினை அளிக்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த அறிவியக்கத்தின் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டின் சில இடங்களில் முடித்திருத்தும் கலைஞர்கள், இன்றும் நூல் அடுக்குகளை அமைத்து, தங்களது வாடிக்கையாளர்களை வாசிக்கத் தூண்டுகின்றனர். அவர்கள் குறித்த தகவல்கள் தமிழ்நாட்டுக்குப் புதிதல்ல; ஆனால், அது குறித்த புகைப்படங்களை இப்போது பிறமாநிலத்தவர், சிலர் பகிர்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஒரு முடிதிருத்தும் நிலையத்தில் டி.வி.க்கு பதிலாக புத்தக அலமாரியை வைத்து, அதிலிருந்து புத்தகங்களை எடுத்துப் படிப்பவர்களுக்கு முடி வெட்டும் போது கட்டணத்தில் சலுகையும் கொடுக்கப்படுகிறது என பெருமையாகப் பதிவிட்டு வருகின்றனர். தமிழ்நாட்டின் அரசியல் மாற்றங்கள் எங்கிருந்து நிகழ்ந்தன என்பதை, அறிந்துகொள்வதன் மூலம், இந்திய அரசியலிலும் மாற்றங்கள் நிகழத் தொடங்கட்டும்.

## ஃப்ளாஷ்பேக்



எஸ்.வஞ்சிகுமார்



**கலைஞர் காலத்தில் வாழ்ந்தோம்!**

1990-ஆம் ஆண்டு அன்றைய தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசு நிகழ்ச்சி மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்தார். அப்போது பழனியிலிருந்து கோவை செல்லும் வழியில் உடுமலையில் வரவேற்பு அளித்தோம். இந்த நிகழ்வையும் அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படத்தையும் என் வாழ்நாளின் பெரும் பேறாகக் கருதுகிறேன். அவர் வாழ்ந்த நாட்களில் நாமும் வாழ்ந்தோம் என்பது பெருமையாக இருக்கிறது.

**– எஸ்.வஞ்சிகுமார், மாவட்டப் பிரதிநிதி, உடுமலை நகரக் கழகம், திருப்பூர் தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


**தமிழ் இணையப் பல்கலைக்கழகம்!**

2001-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் கலைஞர் தொடங்கி வைத்தார். அப்போது பேசிய தமிழறிஞர் வா.செ. குழந்தைசாமி, "உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ, அந்த நாட்டு மண்ணில் இறங்கி விழுந்து வளரக்கூடிய ஆலின் விதையை கலைஞர் நட்டிருக்கிறார்" என வாழ்த்தினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

615

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131